**OS.NO: 69/2024**

**PW 2 :** மோகன்ராம் த/பெ.மாதவநாயுடு

நாள் : 02.04.2026.

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

வாதி சசிகலா என் மனைவி. அவர் இல்லதரசியாக உள்ளார். அவர் எந்த நிறுவனமும் நடத்தவில்லை. நான் விவசாயமும் ரியல் எஸ்டேட்ட தொழில்கள் செய்து வருகிறேன்.

நான் விவசாயம் செய்வதற்கு நிலம் சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். என் பெயரில் 5 ஏக்கர் நிலம் உள்ளது. விவசாயம் செய்வதற்கு ஆதரவாக அடங்கலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது விவசாயம் செய்யவில்லை.

என் பெயரில் விவசாய நிலங்கள் இல்லை விவசாயமும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. செய்வதற்கு புரேக்கர் லைசன்ஸ் வைத்துள்ளேனா என்றால் இல்லை.

ரியல் எஸ்டேட் மூலமாக வருமானம் வருகிறகு என்பதை நிரூபிக்க ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு நிரந்தரமாக வருமானம் எதுவும் இல்லை என்றும் எனது மகளின் வருமானத்தில் தான் நாங்கள் வாழ்ந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

எனக்கு 2 மகள்கள் உள்ளார்கள். ஒரு மகள் திருமணமாகி அவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார். மற்றொரு மகளுக்கு திருமணம் செய்ய உள்ளேன்.

பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்த ரூ.45,00,000/- என்னுடைய பணமா அல்லது என் மனைவியுடைய பணமா என்றால் எனது மனைவி பெயரில் லோன் போட்டு வாங்கிய பணமாகும்.

ரூ.45,00,000/- த்தை நான் இளைய மகளின் மேல் படிப்புகாக வாங்கினேன். மேற்படி கடன் தொகை எனது மகள் படிக்கும் கல்லூரிக்கு நேரடியாக அனுப்பி விடுவார்கள் என்று சொன்னால் சரியல்ல.

எந்த வங்கியிலும் கல்வி கடனை பெற்றோரிடம் ரொக்கமாக கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. கல்வி கடனுக்காக நான் என் வீட்டை அடமானம் வைத்தேன்.

கல்வி கடனுக்காக அடமானம் வைத்தாலும் பணத்தை பெற்றோரிடம் ரொக்கமாக கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. CC.81/2019 என் மனைவியால் பிரதிவாதிக்கு எதிராக JM-I,

Arakkonam நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

முனிரத்தினம் என் சித்தப்பா. அவரும் CC.82/2019என்ற வழக்கை இந்த வழக்கின் பிரதிவாதிக்கு எதிராக காசோலை வழக்கை JM–I, Arakkonam நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது.

எனக்கு தெரியாது என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வெங்டபதி என் தங்கையின் கணவர். அவரும் பிரதிவாதிக்கு எதிராக STC.134/2019 என்ற வழக்கை திருத்தணி JM நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது.

ராமு என்பவர் STC.109/2023 மற்றும் STC.110/2023 என்ற வழக்குகளை திருத்தணி JM நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி ராமு என் மைத்துனர் வெங்கடபதியின் உறவினர் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அனைத்து வழக்களும் பிரதிவாதியிடம் காசோலைகளை வாங்கி என்னால் பூர்த்தி செய்யப்பட்டு பதிவு செய்யபட்டவை என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி என் மகளிடம் என்ன தேதியில் எவ்வளவு பணம் வாங்கினார் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு நியாபகம் இல்லை.

எனது மனைவி தாக்கல் செய்த வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதற்காக பொய்யான விவரங்களை கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.04.02 19:10:30 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.